Judicial Form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL

**Sessions Case No. 25 of 2025**

**Deposition of P.W.12 witness for Prosecution**

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி. ராதாமணி | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 28th day of January 2026.

(Accused A1 and A2 are present.)

**முதல்நிலை விசாரணை**:

நான் தற்போது கபிலர்மலையில் வேளாண்மை உதவி இயக்குநராக பணிபுரிந்து வருகிறேன். 29.07.2024ம் தேதி நான் பணியில் இருந்த போது வீரக்குட்டையை சேர்ந்த தங்கவேல் என்பவர் மனைவி சுப்பாயி என்பவரின் கரும்பு காட்டில் தீப்பிடித்து விட்டதாக கிடைத்த தகவலின் பேரில் சேதமடைந்த கரும்பு பயிர்களின் சேதத்தை மதிப்பீடு செய்து நான் 29.07.2024ம் தேதியும், 01.08.2024ம் தேதியும் தீப்பிடித்த கரும்பு காட்டை கள ஆய்வு செய்தேன். 05.08.2024ம் தேதி வேலகவுண்டம்பட்டி வட்ட காவல் ஆய்வாளர் மேற்படி கரும்பு காட்டில் சேதமடைந்த கரும்பின் தோராய மதிப்பு அறிக்கை வழங்க வேண்டி கடிதம் கொடுத்தார். சர்வே எண்.11/1பி3-ல் 2.20 ஏக்கரும், சர்வே எண்.62/1பி-ல் 1 ஏக்கரும், ஆக மொத்தம் 3.20 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த கரும்பு தீப்பிடித்து சேதமாகியிருந்தது. சர்வே எண்.62/1பி-ல் 1 ஏக்கர் கரும்பு பயிர் தீப்பிடிக்காமல் இருந்தது. அந்த நிலங்களில் சொட்டுநீர் பாசனத்திற்காக அமைக்கப்பட்டிருந்த பாசன கருவிகளான Lateral and Emitting Pipes கருகியிருந்தது. மேற்படி கரும்பு பயிர் பொன்னி சுகரர்ஸ் சர்க்கரை ஆலையில் பதிவு செய்யப்பட்டிருந்ததால் தீப்பிடித்த கரும்புகளை வெட்டி கரும்பை சர்க்கரை ஆலைக்கு எடுத்து சென்றுவிட்டார்கள். பொன்னி சுகர்ஸிடமிருந்து தீப்பிடித்த மற்றும் தீப்பிடிக்காத கரும்பின் மகசூல் விவரம் கேட்டு பெற்றேன். அந்த விவர அறிக்கை அ.சா.ஆ.7 ஆகும்.

அதனடிப்படையில் தீப்பிடித்ததால் கரும்பு பயிருக்கு ஏற்பட்ட மகசூல் இழப்பு ரூ.67,281/- என்றும், சொட்டு நீர் பாசன கருவிகளின் சேதமதிப்பு ரூ.1,03,866/-என்றும், ஆக மொத்த சேத மதிப்பு ரூ.1,71,147/- என்று சான்று வழங்கினேன். நான் வழங்கிய மதிப்பீடு சான்று அ.சா.ஆ.8 ஆகும். பின்பு இது சம்பந்தமாக வேலகவுண்டம்பட்டி காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை :

29.07.2024ம் தேதி தங்கவேல் என்பவர் தீப்பிடித்து விட்டதாக வாய்மொழியாக தகவல் கொடுத்தார். நேரில் வந்து தகவல் சொன்னார். நான் அவரிடம் தகவலை எழுதி கொடுக்கும்படி கேட்கவில்லை. தீப்பிடிப்பதற்கு முன்பு 07.07.2024ம் தேதி தீப்பிடித்த நிலத்தில் பயிர் செய்திருந்த கரும்பு பயிரை நோய்வாய்பட்டுள்ளதா என்பதை கண்டறிய ஆய்வு செய்தோம். 07.07.2024ல் ஆய்வு செய்ததற்கான அறிக்கையோ, பதிவோ இல்லை. நான் சொல்வது போல, 07.07.2024ம் தேதி ஆய்வு எதுவும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் ஆய்வு செய்தபோது, ஆய்வு செய்த நிலத்தின் சர்வே எண்ணை உறுதி செய்ய கிராம நிர்வாக அலுவலர் என்னுடன் இல்லை. சர்வே எண்.62/1பி-ல் தீப்பிடித்த கரும்பின் எடைக்கும், தீப்பிடிக்காத கரும்பின் எடைக்கும் சுமார் 2 டன் மட்டுமே வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.11/1பி3-ல் இருந்த கரும்பு தீப்பிடிக்காமல் இருந்திருந்தால் சுமார் 1.5டன் மட்டுமே கூடுதல் எடை வந்திருக்கும் என்று சொன்னால் அவ்வாறு சொல்லமுடியாது. தண்ணீரபற்றாக்குறை காரணமாகவும், நோய்வாய் பட்டதாலும், தீப்பிடித்த வருடத்தில் கரும்பின் மகசூல் குறைவாக தான் வந்துள்ளது என்று சொன்னால் சரியல்ல. தீப்பிடித்த வருடத்தில் வெட்டுக்கூலி இல்லாமல் ஒரு டன் கரும்பின் விலை ரூ.2,277/- ஆகும். தீப்பிடித்த மற்றும் தீப்பிடிக்காத கரும்புகளுக்கு ஒரே விலை தான் சர்க்கரை ஆலைகளால் தரப்பட்டது. சர்க்கரை ஆலைகளில் ஒரு டன் கரும்பின் விலை என்ன ? என்று நாங்கள் கேட்கவில்லை. அது குறைந்தபட்ச ஆதார நிர்ணய விலை என்பதால் கேட்கவில்லை. நான் போய் களஆய்வு செய்த 29.07.2024-ம் தேதிக்கு முன்பே தீப்பிடித்த கரும்பை வெட்டி எடுத்து போய்விட்டார்கள். தீப்பிடிக்காத கரும்பு மட்டும் நிலத்தில் இருந்தது. நுண்ணுயிர் பாசன கருவிகள் 2019 டிசம்பரில் அமைக்கப்பட்டது. நீர் பாசன கருவிகளுக்கு அரசு மானியமாக 75% வழங்கப்பட்டது. நான் அரசு வழங்கிய மானிய தொகையை கழிக்கவில்லை. நீர் பாசன கருவி அமைத்து 5 வருடம் ஆகிவிட்டதால் தேய்மானத்திற்கான மதிப்பை போடவில்லை. புதிய கருவியின் மதிப்பின் அடிப்படையில் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன்.

நீர் பாசன கருவியை பொறுத்து நாங்கள் சேத மதிப்பை கொடுக்கமுடியாது என்றும், அதை வேளாண்மை பொறியியல் பிரிவு தான் கொடுக்க முடியும் என்று சொன்னால் சரியல்ல. காவல் துறை கேட்டுகொண்டதால் வழக்கிற்கு சாதகமாக பொய்யாக சான்றிதழ் வழங்கி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.